மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை வழங்கப்பெற்றது.

திரு. ரெ. வீ. சவுந்திரராஜன் அவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் கோரிக்கை எண் 55-க்கு அவருடைய வெட்டுத்தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப் பெற்றதாகக் கருதப்பெற்றது.

திரு. எம். ஆறுமுகம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன், திரும்பப் பெற்றுக்கொள்ளப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி—

'' மானியக் கோரிக்கை எண் 55 — சாலைப் போக்குவரத்துப் பணிகள், கப்பற் போக்குவரத்து குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ரூ. 11,67,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும் ''.

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை வழங்கப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளைக் காலை 9–00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 2–06 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்.

312. தமிழ்நாடு 1940ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தின் 113வது விதியில் திருத்தமொன்று செய்வதற்காக உள்துறையின் 18-1-1978ஆம் தேதியிடப்பெற்ற 132ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு (தமிழ்நாடு 1939 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 4/1939) 133(3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது).

313. தமிழ்நாடு 1940 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தில் சில திருத்தங்கள் செய்வதற்காக உள்துறையின் 16-1-1978 ஆம் தேதியிடப்பெற்ற 132 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு (தமிழ்நாடு 1939 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 4/1939) 133 (3) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.)

1978 மார்ச் 20]

314. 1-1-1978 ஆம் தேதியுடன் முடிவடையும் காலாண்டு காலத்திற்கு கும்பகோணத்திலுள்ள சோழன் போக்குவரததுக் கழகம் வைத்திருக்கிற அல்லது பயன்படுத்துகிற பயணிப் பேருந்து

களைப் பொருத்தவரையில் தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்புச் சட்டத்தின் கீழ் வரி செலுத்துவதற்கான காலத்தை நீட்டிப்பது குறித்த உள்துறையின் (போக்குவரத்து-I) 17-1-1978ஆம் தேதியிடப்பெற்ற 127 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு (தமிழ்நாடு 1974ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்புச் சட்டத்தின் [தமிழ்நாடு சட்டம் 13/1974) 25(2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

315. சென்னை பெருநகர்ப்பகுதி குடிநீர் வழங்கு—கழிவு நீரகற்று திட்டப் பணியில் தற்போது அமர்த்தப்பட்டுள்ள, பன்னாட்டு வளர்ச்சித்திட்ட, உலக சுகாதார நல நிறுவனத்திற்குச் சொந்தமான பத்து வண்டிகளுக்கு, தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்புச் சட்டத்தின் கீழ் விதிக்கத் தக்க வரியைச் செலுத்துவதிலிருந்து விலக்களிப்பது குறித்து உள்துறையின் (போக்குவரத்து-I) 1-2-1978 ஆம் தேதியிடப் பெற்ற 238 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு (தமிழ் நாடு 1974 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்புச் சட்டத்தின் [தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

316. வேளாண்மைத் துறையில் 23-10-1971 ஆம் தேதியன்று வெளியாகி 17-11-1971 ஆம் தேதியிடப்பெற்ற தமிழ்நாடு அரசிதழின் பாகம் II பிரிவு 1-ல் பக்கங்கள் 1177-1179 (ஆங்கிலத்தில்) வெளியான II—1. 5117/1971 ஆம் எண் அறிவிப்பில் (இது பின்னர் திருத்தப் பெற்றுள்ளது) திருத்தமொன்று செய்வது குறித்து, வேளாண்மை துறையின் 3-2-1978 ஆம் தேதியிடப்பெற்ற 164 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு (தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு வேளாண்மை விளை பொருள் அங்காடிகள் சட்டத்தின் [தமிழ்நாடு சட்டம் 27/1959) 29 (4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].